<u>இராணிப்பேட்டை நகராட்சி</u>

**<u>2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09– ஆம் நாள் வியாழன்கிழமை பிற்பகல் 3.30 மணி அளவில் நடைபெற்ற அவரசரக்கூட்ட நடவடிக்கைகள்</u>**

<u>தலைமை :– தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்</u>

<table>
<tr><th>மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>09.09.2021</td><td>

**<u>பொருள் எண்.647</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20028/2021/தி2 நாள் 08.09.2021–ல் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 2021–2022 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மான்யக் கோரிக்கையின் போது மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பொதுமக்கள் மற்றும் சிறுவர்களின் நலனுக்காகவும், நடப்பாண்டில் 552 பூங்காக்கள் ரூ.122.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என அறிவித்ததற்கிணங்க, இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்துவது தொடர்பாக, விரிவான திட்ட அறிக்கையுடன் Land Extet, Area, Free from Encroachment, Owner Classification FMB Sketch உள்ளடக்கிய விரிவாக கருத்துருவினை 13.09.2021 அன்று நேரில் சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க, கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்காக்களை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண். 16, மஹாவீர் லேஅவுட் பூங்கா மேம்படுத்துதல்</td><td>105.00</td></tr>
<tr><td>2</td><td>வார்டு எண். 28, மஹாவீர் நகர் பூங்கா மேம்படுத்துதல்</td><td>95.00</td></tr>
<tr><td>3</td><td>வார்டு எண்.5, என்.ஏ.துரைசாமி லேஅவுட் பூங்கா மேம்படுத்துதல்</td><td>60.00</td></tr>
<tr><td>4</td><td>வார்டு எண்.27 பி.வி.தியாகராஜன் பூங்கா, பிஞ்சி மேம்படுத்துதல்</td><td>26.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>286.00</td></tr>
</table>

மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்காக்களை மேம்படுத்துவதற்கு விரிவான திட்ட அறிக்கையினை உரிய நிர்வாக அனுமதி வழங்ககோரியும், நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்ககோரியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களுக்கு மேலனுப்பி வைக்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 647 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>**<br>**மன்றம் அனுமதிக்கலாம்**<br>**(ந.க.எண். 1776/2021/இ1)** | |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.648</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் கடிதத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 2021–2022 ஆம் ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மான்யக் கோரிக்கையின் போது மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் 50 நூலகங்கள் மேம்படுத்தப்படும் என அறிவித்ததற்கிணங்க, இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23 சந்தைமேடு பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைத்தல் பணிக்கான, விரிவான திட்ட அறிக்கை மற்றும் கருத்துருவினை 13.09.2021 அன்று நேரில் சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க, கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.<br><table><tr><th>வ.எண்.</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்</th></tr><tr><td>1</td><td>வார்டு எண். 23, சந்தைமேடு பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டும் பணி</td><td>110.00</td></tr></table><br>மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டும் பணிக்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களுக்கு கடிதம் மற்றும் கருத்துரு மேலனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண். 1777/2021/இ1)** | நகர்மன்றத் தீர்மான எண். 648 அனுமதிக்கப்பட்டது. |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.649</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 28 அவர்களின் அலுவலகத்திலிருந்து இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செய்வதற்கான திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்து கடிதம் மற்றும் கருத்துரு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டதற்கு இணங்க இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 காரை மேட்டு தெரு பகுதியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் பழுதடைந்துள்ளதால் மேற்படி சமுதாய கழிப்பிடத்தினை தொகை ரூபாய். 5.50 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செய்திட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது | நகர்மன்றத் தீர்மான எண். 649 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் விவரம்</th><th>மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண். 1,காரை மேட்டுத்தெருவில் உள்ள சமுதாய கழிப்பிடம் பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்</td><td>5.50</td></tr>
</table>
மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 காரை மேட்டு தெரு பகுதியில் சமுதாய கழிப்பிடத்தினை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செய்வதற்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கையினை இணைத்து கடிதம் மற்றும் கருத்துரு மேலனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண். 1726/2021/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>09.09.2021</td>
<td>
<u>பொருள் எண்.650</u><br>
இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகராட்சி எல்லைக்குள் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு வரும் பலவகை விட்டமுள்ள பி.வி.சி மற்றும் Asbestos Cement Pipe –கள் நீண்ட நாட்களாக பிரதான குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாவதை உடனடியாக போர்கால அடிப்படையில் சரிசெய்து சீரான குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கிடவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.5,00,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>
2) மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ,5,00,000/- இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் 1629/2021/இ1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 650 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>09.09.2021</td>
<td>
<u>பொருள் எண்.651</u><br>
தமிழ்நாடு அரசு 24.08.2021ம் தேதிய சட்ட மன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு நகர்புற வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (I & A Fund) இராணிப்பேட்டை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவித்ததை தொடர்ந்து இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான சென்னை சித்துர் தேசிய நெடுஞ்சாலையை (MBT Road ) NH4 ஒட்டிஉள்ள வார்டு டி
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 651 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>பிளாக் எண்.13 நகரளவு எண் 12/1, 12/2, 12/3 3.95 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான விரிவான கீழ்காணும் விவரப்படி திட்ட அறிக்கை (DPR) தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களுக்கு சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>1.பேருந்து நிழற்கூடம் மற்றும் அடிப்படை வசதிகள் – ரூ.9.35 கோடி.<br>2.கடைகள் மற்றும் கழிப்பறை கட்டிடம் – ரூ. 0.90 கோடி.<br>மொத்தம் ரூ. 10.25 கோடி.<br><br><u>அலுவலக குறிப்பு:–</u><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.201/2021/இ1)</td><td></td></tr>
<tr><td>09.09.2021</td><td><u>பொருள் எண்.652</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தேவையான முககவசம் 25000 எண்ணிக்கை, கையுறை 50000 எண்ணிக்கை, சப்ளை செய்ய 02.08.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br><table><tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர் &முகவரி</th><th>முகக் கவசம்</th><th>கையுறை</th></tr><tr><td>1</td><td>Madha Enterprises No.40 Balu Theatre Back Side South Railway Road Ranipet</td><td>ரூ.4/–</td><td>ரூ.5.75/–</td></tr><tr><td>2</td><td>United Safety & Tools No.13/S2 Mohana Nagar Poonamalle, Chennai</td><td>ரூ.5/–<br>(ஒன்றிற்கு)</td><td>ரூ.6.25/–<br>(ஒன்றிற்கு)</td></tr></table></td><td>நகர்மன்றத் தீர்மான எண். 652 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td><table><tr><td>3</td><td>TVR Enterprises, 32,<br>Near Madha Temple<br>Melmaruvathur</td><td>ரூ.5.50/-</td><td>ரூ.6.75/-</td></tr></table><br>மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள Matha Enterprises இராணிப்பேட்டை என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1. மாதா எண்டர்பிரைசஸ் இராணிப்பேட்டை என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்படித் தொகையினை கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகாக மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதி(SDRF) – யிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.1203/2020/எச்1)</td><td></td></tr>
<tr><td>09.09.2021</td><td><u>பொருள் எண்.653</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டாடா ஏசி வாகனம் TN73AB9325 எண் கொண்ட வாகனத்தில் உள்ள பேட்டரி பழுதடைந்துள்ளதால், புதியதாக வாங்கிக் கொள்ள அதற்காகும் தோராய செலவினம் ரூ.8000/- க்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) TN73AB9325 -ல் உள்ள பேட்டரி பழுதடைந்துள்ளதால், புதியதாக வாங்கிக் கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) ரூ.8000/-னை 2021-2022 ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1108/2021/எச்1)</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 653 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>09.09.2021</td><td><u>பொருள் எண்.654</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு சார்பாக வருவாய் மற்றும் பேரிடம் மேலாண்மை துறை, இராணிப்பேட்டை அவர்களின் கடிதம் எண்.எம்1/44/2021 நாள் 29.07.2021 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள 01.08.2021 முதல் 07.08.2021 வரை பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியமைக்கு ஆன செலவினம் ரூ.24200/- திரு.ஆ.அப்துல்ரஹிம், துப்புரவு அலுவலர் வழங்க கோரியுள்ளார். மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 654 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 2) Covid – 19 விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம் ஆவதினாலும், தலைமை செயலாளர் அவர்களின் அறிவுரை ஆவதினாலும், விழிப்புணர்வு நடத்தி செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>**(ந.க.எண். 1463/2021/எச்1)** | |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.655</u>**<br>இந்நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்த திரு.ஜி.கோதண்டபானி என்பவர் கடந்த 30.06.2021 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அன்னாரின் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். திரு.ஜி.கோதண்டபானி, தூய்மைப் பணியாளர் அவர்களின் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்குண்டான வட்டி ரூ.14807/- மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10,000/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.27767/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1272/2021/பி2)** | நகர்மன்றத் தீர்மான எண். 655 அனுமதிக்கப்பட்டது. |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.656</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட ஆயுர்வேத மருத்துவமனையில் மருத்துவ ஆண் செவிலியராக பணிபுரிந்த திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் கடந்த 07.05.2021 அன்று பணியிடை காலத்தில் மரணமடைந்து விட்டார். அன்னாரின் மனைவியும் வாரிசுதாரருமாகிய திருமதி.வா.வரலட்சுமி என்பவர் அன்னாரின் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு மனுவில் கோரியுள்ளார். மேற்படி திரு.எஸ்.வாசுதேவன் ஆண் செவிலியர் அவர்களின் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்குண்டான வட்டி ரூ.12989/- ஆக மொத்தம் ரூ.15949/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1631/2021/பி2)** | நகர்மன்றத் தீர்மான எண். 656 அனுமதிக்கப்பட்டது. |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.657</u>**<br>இந்நகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்த திரு.கே.கோபி என்பவர் கடந்த 31.03.2021 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அன்னாரின் சிறப்பு சேமநல நிதித் தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். திரு.கே.கோபி, தூய்மைப் பணியாளர் அவர்களின் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்குண்டான வட்டி ரூ.3430/- மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10,000/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.16390/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>** | நகர்மன்றத் தீர்மான எண். 657 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1273/2021/பி2) | |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.658</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 சினிவாசன்பேட்டையில் நெடுங்காலமாக குடிநீர் பகிர்மான குழாய் இல்லாமல் இருப்பதால் புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கவும் அதற்க்கான தோராய செலவினம் ரூ.1,00,000/-ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.1,00,000/- இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 1666/2021/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 658 அனுமதிக்கப்பட்டது. |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.659</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் .1 முதல் 30 வரையிலான பகுதிகளில் கீழ்க்கண்ட விவரப்படியான தெருவிளக்குகள் 01.07.2021 முதல் மூன்று மாத காலத்திற்கு M/S. HI – TECH TRONICS, சென்னை -33, நிறுவனம் மூலம் பராமரித்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.599 நாள்.30.06.2021-ல் அனுமதியளிக்கப்பட்டதின் பேரில் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>**<u>தெருவிளக்குகளின் விவரம் :-</u>**<br>1)4x40' Watts Tube Light -1339 Nos<br>2)250' Watts Sodium Vapour Lights - 328Nos<br>3)T51 x105 Watts CFL Lamp - 150 Nos<br>4) )T54x85 Watts CFL Lamp - 33 Nos<br>5)T54x72 Watts CFL Lamp - 58 Nos<br>6)T54x45 Watts CFL Lamp - 145 Nos<br>7)400' Watts MH (Hight Mast Light) - 73 Nos<br>8)250' Watts MH (Hight Mast Light) - 28 Nos | நகர்மன்றத் தீர்மான எண். 659 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 9)300' Watts LED (Hight Mast Light) – 16 Nos<br>10)150' Watts LED – 50 Nos<br>11)50' Watts LED – 18 Nos<br>12)40' Watts LED – 9 Nos<br>----------------<br>2247 Nos<br>----------------<br>இந்நகராட்சியில் மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் 30.09.2021 அன்றுடன் முடிவடைகிறது. மேலும் தற்போது 2021–2022–ம் ஆண்டிற்கு தெருவிளக்கு பராமரிப்புப் பணியினை தனியார் மூலம் மேற்கொள்வதற்கு உரிய அனுமதி வழங்கக்கோரி விரிவான திட்ட அறிக்கை ,மற்றும் கருத்துரு இணைத்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.154/2015/இ1) | |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.660</u>**<br>இந்நகராட்சி வார்டு எண்.1 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணியினை ஒப்பந்ததாரர் M/s. HI–TECH TRONICS, CHENNAI – 33 என்ற நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தாரரின் பணிக்காலம் 31.03.2020 உடன் முடிவடைவதால், M/s.HI–TECH TRONICS, CHENNAI – 33 என்பவரை தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணியினை பழைய ஒப்பந்தப்புள்ளி விகிதத்தின் அடிப்படையில் அடுத்த ஓராண்டு காலத்திற்கு பணியினை மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்வதற்கு உரிய அனுமதி வழங்கக் கோரி, தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.154/2015/இ1 நாள் 12.02.2020–ல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது கொரோனா வைரஸ் (COVID –19) தொற்று நோய் பரவல் காரணமாக நாடு முழுவதும் 25.03.2020 முதல் முழு ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாக, பொதுமக்களின் பொது நலன் கருதியும், மேற்படி தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை – 28 அவர்களிடமிருந்து உரிய அனுமதி கிடைக்கும் வரை இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணியினை ஒப்பந்ததாரர் M/s.HI–TECH TRONICS, CHENNAI – 33 என்பவர் ஏற்கனவே உள்ள பழைய ஒப்பந்தப்புள்ளி விகிதத்திலேயே மேற்கொள்ள 01.04.2020 முதல் 30.06.2020 வரை மூன்று மாதக் காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யவும், மேற்படி பணிக்கான தோராய செலவினம் தொகை | நகர்மன்றத் தீர்மான எண். **660** அனுமதிக்கப்பட்டது. |

ரூ.5.00 இலட்சத்திற்கும் நகரமன்றத் தீர்மானம் எண்.106 நாள் 31.03.2020–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதன்பேரிலும், நகரமன்றத் தீர்மானம் எண்.171 நாள் 30.06.2020–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதன்பேரில், 01.07.2020 முதல் 30.09.2020 வரை மேலும், மூன்று மாதக்காலத்திற்கு கால நீட்டிப்பு செய்தும், நகரமன்றத் தீர்மானம் எண்.307 நாள் 30.09.2020–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதன் பேரில், 01.10.2020 முதல் 31.12.2020 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்தும், நகரமன்றத் தீர்மானம் எண்.418 நாள் 31.12.2020–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதன் பேரில், 01.01.2021 முதல் 31.03.2021 வரை காலநீட்டிப்பு செய்தும், நகரமன்றத் தீர்மானம் எண்.508 நாள் 26.02.2021–ல் 01.04.2021 முதல் 30.06.2021 வரை மூன்று மாத காலத்திற்கு தற்காலிக அடிப்படையில் காலநீட்டிப்பு செய்தும்நகரமன்றத் தீர்மானம் எண்.599 நாள் 30.06.2021–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதன்பேரில், பணி உத்தரவு வழங்கப்பட்டு தெருவிளக்குகள் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்கு மூன்றாண்டுகளுக்கான ஒப்பந்தக்காலம் 31.03.2021–ல் முடிவடைகிறது. எனவே, மேற்படிப் பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளிக் கோரப்பட வேண்டும். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் தமிழ்நாடு மாநிலம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக பொது ஊரடங்கு உத்தரவு சில குறிப்பிட்ட தளர்வுகளுடன் நீட்டிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருவதின் காரணமாக அலுவலக நடைமுறைகளின்படி, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளரிடம் உரிய அனுமதி பெறுவதற்கு சிறிது காலதாமதம் ஆகும் என்பதாலும், மேலும், தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை – 28 அவர்களிடமிருந்து மேற்படி பணிக்கான கால நீட்டிப்பு செய்வதற்கான உரிய அனுமதி கிடைக்கப்பெறும் வரையில் இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் M/s.HI–TECH TRONICS, CHENNAI – 33 என்பவரை 01.10.2021 முதல் 31.12.2021 வரை மூன்று மாத காலத்திற்கு தற்காலிக அடிப்படையில், காலநீட்டிப்பு செய்தும், ஏற்கனவே உள்ள பழைய ஒப்பந்தப்புள்ளி விகிதத்திலேயே பணியினை மேற்கொள்ளவும், கால நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கி, தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணியினை மேற்கொள்ளவும் மேற்படிப்பணிக்கான தோராய செலவினம் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** :–

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) M/s.HI–TECH TRONICS, CHENNAI – 33 ஒப்பந்ததாரர் என்பவரை ஏற்கனவே உள்ள பழைய ஒப்பந்தப்புள்ளி விகிதத்தின் அடிப்படையில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணியினை மேற்கொள்ள 01.10.2021 முதல் 31.12.2021 வரை மூன்று மாதக் காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கவும், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணியினை மேற்கொள்ளவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும், மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>(ந.க.எண்.154/2015/இ1)</u>**

| | | |
|---|---|---|
| | | |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.661</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் பொது பிரிவில் உள்ள மேலாளர் அறை உதவி கணினி திட்ட அமைப்பாளர் அறை மற்றும் சுகாதார அலுவலர் அறை ஆகியவற்றில் உள்ள குளிர்சாதன பெட்டி பழுதடைந்துள்ளதால் அவற்றினை சரி செய்யும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.561 நாள் 30,06,2021 ஆம் தேதியில் முன்அனுமதி அளித்துள்ளதின் பேரில் உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கு24.08.2021 ஆம் தேதியில் கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது<br><br>**வ.எண்** / **ஒப்பந்ததாரர்** / **விலைப்புள்ளி விகிதம்**<br>1 / G.Gomathi, G.K.Enterprises, 24A, L.F.Road, Pinji, Ranipet / 29850/-<br>2 / NMCoolTech, 35A, Bharathidasan Street, Arcot. 632 503 / 31150/-<br>3 / Senthil Refrigeration Sales & Services, 120B, MBT Road, Auto Nagar, Ranipet 632 401 / 34200/-<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்படி பணிக்கு நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>3. மேற்காணும் பட்டியலில் வரிசைஎண் 1 ல் கண்டுள்ள G.Gomathi G.K.Enterprises, Ranipet என்பவர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்<br><br>(ந.க.எண். 2021/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 661<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 09.09.2021 | **<u>பொருள் எண்.662</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20 காட்டன் பஜார் சாலை முதல் ஏஜென்ட் பெருமாள் கோயில் தெரு வரை உள்ள பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு ஏற்கனவே பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாயினை அகற்றி புதியதாக பதிக்கவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ. 2,50,000./—ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினம் ரூ. 250000/— இந்நகராட்சி குடிநீர்நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். /2021/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 662 அனுமதிக்கப்பட்டது. |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.663</u>**<br>மாவட்ட ஆட்சியர் ,இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க எம்.1/56/2021 நாள் 28.08.2021 ல் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கிணங்க 2021ம் ஆண்டு வடகிழ்க்கு பருவமழை காலத்தில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் உள்ள கழிவுநீர் கால்வாய்களை JCB, HITACHI , TIPPERS, TRACTORS ஆகிய வாகனங்களை கொண்டு துர்வாரி மழைநீர் உடனடியாக வடிவதற்கு ஏற்றவகையில் சீரமைக்கவும் பலபடுத்தவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ,9,90,000/— இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 1705/2021/இ1) | நகர்மன்றத் தீர்மான எண். 663 அனுமதிக்கப்பட்டது. |
| 09.09.2021 | **<u>பொருள் எண்.664</u>** | நகர்மன்றத் தீர்மான |

| | | |
|---|---|---|
| | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 28 அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16341/2021/இ3 நாள் 26.08.2021 குறிப்பிட்டுள்ளப்படி தொலைநோக்கு திட்டம் 2031–ன் கிழ் இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் அமைந்துள்ள சாலைகளின் நீளம், அகலம், தன்மை மற்றும் காலவாய் மற்றும் சிறுபாலங்கள் ஆகியவற்றின் விவரங்களை நேரில் ஆய்வு செய்து அறிக்கை தயாரித்து சாலை விவர பதிவேற்றம் செய்யவும் மேற்படி பணியினை மேற்கொள்ள சாலை நீளம் அளக்கும் கருவி (RODO METER) 2 எண்ணிக்கை வாங்கவும் உள்ளுர் விலைப்புள்ளி பெற்று தனியர் மூலம் துரிதமாக விவரங்களை சேகரித்து சாலை விவர பதிவேடு தயாரிக்கவும் பணியினை முடிக்கவும் அதற்காகும் தோராய செலவினம் தொகை ரூபாய்.75000/–ற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கு உள்ளுர் விலைப்புள்ளி கோருவதற்கும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ,75,000/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண் 1704/2021/இ1) | எண். 664<br>அனுமதிக்கப்பட்டது. |

ஒம்./ கி.ஜெயராமராஜா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இராணிப்பேட்டை நகராட்சி.